## ABSTRACT

Schemes – State Scheme – Chief Minister's Green House Scheme (CMGHS) – Implementation of the Scheme for the year 2020-21 – Construction of 20,000 Green Houses including 8803 houses for Tribal families during 2020-21 – Administrative Sanction – Guidelines prescribed - Orders – Issued.

Rural Development and Panchayat Raj (SGS.1) Department

**G.O. (Ms.) No.133**

**Dated 03.08.2020**
**சார்வரி – ஆடி 19–ந்தேதி**
**திருவள்ளுவர் ஆண்டு–2051**

**Read:**

1. G.O. (Ms.) No.89, Rural Development and Panchayat Raj (SGS.1) Department, dated 20.07.2019.
2. From the Director of Rural Development and Panchayat Raj Letter No.15897/2020/RHS-1.1, dated 22.04.2020

-------

**ORDER:**

In the Government order read above, orders were issued for the implementation of Chief Minister's Solar Powered Green House Scheme along with the detailed guidelines for the year 2019-20.

2. In the Budget Speech 2020-21, among others, the Hon'ble Deputy Chief Minister has made the following announcement on the floor of Assembly on 14.02.2020:-

(Para No.74) "20,000 houses under Chief Minister's Green House Scheme will be taken up for construction, including 8803 houses for tribal families to ensure 100 per cent coverage. The amount of Rs.30,000/- per house intended for installation of a solar panel under the Chief Minister's Green House Scheme will be merged with the civil construction cost of the house and the overall cost of construction per house will now be Rs.2.10 lakh and Rs.500 crore has been provided for Chief Minister's Green House Scheme."

(Para No.167) "Under the Chief Minister's Green House Scheme, houses will be constructed for all the 8,803 tribal families in need of a house at a cost of

Rs.3 lakh per house in 2020-21. The differential cost of Rs.90,000 per house will be provided as a special allocation from the Tribal Welfare budget."

3. Pursuant to the above announcement, the Director of Rural Development and Panchayat Raj in the letter 2nd read above has sent a proposal to the Government for the construction of 20,000 houses under Chief Ministers Green House Scheme for the year 2020-21 at a total cost of Rs.500.00 crore and requested to release 50% of the total cost of Rs.500.00 crore including Rs.80 crore intended for the additional allotment for Tribal beneficiaries. He has also sent draft guidelines both in English and Tamil for approval of the Government.

4. After detailed examination of the proposal of the Director of Rural Development and Panchayat Raj, the Government issue following orders:-

(a) administrative sanction is accorded for Rs.499,22,70,000/- for construction of 20,000 houses (11,197 houses at the cost of Rs.2.10 lakh for SCs and others and 8803 houses at the cost of Rs.3.00 lakh for STs) under the Chief Minister's Green House Scheme (CMGHS) for the year 2020-21;

(b) Guidelines for the implementation of Chief Minister's Green House Scheme for the year 2020-21 both in English and Tamil is appended to this order.

5. This order issues with the concurrence of Finance Department vide its U.O. No.24322/RD/20, dated 03.08.2020.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**HANS RAJ VERMA,**
**ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT.**

To
The Director of Rural Development and Panchayat Raj,Chennai–15.
All District Collectors (except Chennai).
All Project Directors, District Rural Development Agencies.
(through the Director of Rural Development and Panchayat Raj)
The Accountant General, Chennai – 9/18/35.
The Pay and Accounts Officer (South), Chennai – 35.

Copy to
Hon'ble Chief Minister's Office, Chennai – 9.
The Special Personal Assistant to Hon'ble Minister (Forest), Chennai-9.
The Special Personal Assistant to Hon'ble Minister (MA, RD & Implementation of Special Programme), Chennai-9.
The Special Personal Assistant to Hon'ble Minister (Adi Dravidar and Tribal Welfare), Chennai-9.

The Private Secretary to the Chief Secretary to Government,
Chennai - 9.
The Principal Private Secretary to the Additional Chief Secretary to Government,
Rural Development and Panchayat Raj Department, Chennai – 9
The Private Secretary to the Additional Chief Secretary
to Government, Adi Dravidar and Tribal Welfare Department, Chennai-9.
The Private Secretary to the Additional Chief Secretary to Government,
Environment and Forests Department, Chennai-9.
Finance (RD /BG I /BG II) Department, Chennai-9.
National Informatics Centre, Chennai-9.
SF / SC.

**// FORWARDED / BY ORDER //**

Section Officer.

## G.O. (Ms).No.133, RURAL DEVELOPMENT AND PANCHAYAT RAJ (SGS-1) DEPARTMENT, DATED 03.08.2020

## ANNEXURE

## Guidelines for Implementation of Chief Minister's Green House Scheme (CMGHS) - 2020-21

### 1. Introduction:

The Chief Minister's Solar Powered Green House Scheme (CMSPGHS) was launched during the year 2011-12. It is a flagship scheme of Government of Tamil Nadu, which fulfils the Housing requirement of the rural poor people along with Solar Powered Home Lighting System and thereby promoting green energy. Under this free housing scheme, three lakh Green houses were constructed at an estimate cost of Rs.5,940 crore from the years 2011-12 to 2015-16.

Since the scheme is highly popular among the people of Tamil Nadu and the unit cost provided under the scheme is higher than other housing schemes, it was extended for another five years for construction of 20,000 houses per year. Accordingly, 60,000 houses have been constructed from the year 2016-17 to 2018-19 at a cost of Rs.1,260 crore and 20,000 houses are being constructed for the year 2019-20 at an estimated cost of Rs.420 crore.

Meanwhile, Hon'ble Deputy Chief Minister in his Budget speech for the year 2020-21 has announced that 20,000 houses will be constructed during 2020-21 including 8803 houses for the tribal families to ensure 100% coverage under Chief Minister's Green House Scheme (CMGHS) at a total estimate cost of Rs.500 crore. Moreover, the amount of Rs.30,000 per house intended for installation of solar lights will be merged with the civil construction cost of the house and the overall cost of construction per house will now be Rs.2.10 lakh. Further, for the tribal beneficiaries, a sum of Rs.90,000 will be provided in addition to the Rs.2,10,000 and thus the unit cost of each house for tribal beneficiary will be Rs.3 Lakh.

Based on this, 20,000 houses will be constructed including 8,803 houses for the tribal families to ensure 100% coverage under Chief Minister's Green House Scheme (CMGHS) at a total estimate cost of Rs.500 crore during the year 2020-21. Moreover, the amount of Rs.30,000 intended for installation of solar lights will be merged with the civil construction cost of the house and the overall cost of construction will be raised to Rs.2.10 lakh per house. Further, for the Tribal beneficiaries, a sum of Rs.90,000 will be provided in addition to the Rs.2,10,000 and thus the unit cost of each house for Tribal beneficiary will be Rs.3 Lakh.

Moreover, in order to protect environment and to increase greenery in rural areas, homestead plantation will be done in 20,000 Green Houses at the rate of 3 to 5 fruit bearing tree saplings to each beneficiary depending on the availability of space. The tree saplings will be supplied in convergence with Mahatma Gandhi National Rural Employment Guarantee Scheme (MGNREGS).

**2. Salient features of the Scheme:**

(i) The poor people living in rural areas are eligible to be beneficiaries of the Chief Minister's Green House Scheme (CMGHS).

(ii) Each house shall be built with an area of 300 square feet at a unit cost of Rs.2.10 lakh for SCs and Others and Rs.3 lakh for STs fully funded by the State Government.

(iii) The construction of house should be carried out by the beneficiaries themselves.

(iv) Each house shall consist of a living room, bed room, kitchen, toilet and verandah apart from the provision for harvesting rain water.

(v) The payment of bills for the construction work done by the beneficiaries should be credited into the beneficiaries bank account directly in the following four stages :

1. Basement level
2. Lintel level
3. Roof laid stage
4. Completion stage.

(vi) The Green Houses shall be constructed either in situ (replacing his/her existing dwelling structure) or on the land owned by the beneficiary elsewhere in the Village Panchayat. No land acquisition is envisaged under this scheme. People with pattas for their house sites are only eligible under this scheme.

(vii) Each beneficiary will be provided with 3 to 5 fruit bearing tree saplings depending on the availability of space which shall be planted in the house site around the house in convergence with MGNREGS.

**3. Type design:**

(i) The exclusive type design already developed for this Scheme shall be followed.

(ii) To ensure uniformity in the design, no change of type design is normally permitted. However, changes in type design, such as shifting of kitchen room or bedroom to another direction, etc., shall be permitted without altering the total plinth area of 300 sq.ft.

(iii) The logo for this scheme printed on ceramic tiles shall be affixed visibly on all the houses.

(iv) The name of the scheme, beneficiary's name and year of construction shall be painted prominently on each completed house.

**4. Convergence with MGNREGS:**

(i) In addition to the unit cost of Rs.2.10 lakh for SCs / Others and Rs.3 lakh for STs as a convergence measure, each beneficiary shall be paid the notified wage rate in force under MGNREGS towards utilisation of 90 Person days for the construction of the house.

(ii) Further, a sum of Rs.12,000 shall be provided to the beneficiary for construction of Individual House Hold Latrine (IHHL) in convergence with Mahatma Gandhi National Rural Employment Guarantee Scheme (MGNREGS) .

**5. Eligibility of the Beneficiaries:**

The beneficiary should:

(i) Be a resident of the Village Panchayat concerned.
(ii) Do not own any other pucca concrete house in the village or elsewhere.
(iii) Should not have been benefitted under any other housing scheme of the Government.
(iv) Own a site of not less than 300 sq.ft. Area.
(v) Have clear patta for the site/house in the name of the head of the family or any other member of the household.

**6. Mode of Selection of Beneficiaries:**

(i) The beneficiaries should be selected from the poor people living in the Village Panchayat and the list of such beneficiaries shall be approved by the Gram Sabha. While selecting the beneficiaries, priority should be given to those who are listed as vulnerable in PIP list prepared by TNSRLM and erstwhile PVP project.
(ii) Out of the total allocation of 20,000 houses for the year 2020-21, 8,803 houses shall be allotted to Scheduled Tribes. Out of the remaining 11,197 houses, 29% shall be allotted to Scheduled Castes i.e., 3,247 houses and 71% shall be allotted to others i.e., 7,950 houses (Other than SC and ST).
(iii) 4% of the District-wise allocation should be reserved exclusively for differently abled persons across all categories.
(iv) While preparing the list of beneficiaries, priority should be given to the following persons-differently abled, widows, destitute and deserted women, women headed families, Ex-servicemen and retired members of the Paramilitary forces, families having severely malnourished children (as identified by the ICDS Department), transgenders, HIV/AIDS/TB affected persons who are certified by the Deputy Director (Health Services) concerned and victims of natural calamities such as fire, flood, etc., Priority shall also be given to households having a mentally challenged person in the family.

**7. Allocation of Houses:**

(i) At the State level, the Director, Rural Development & Panchayat Raj shall allocate the target number of houses to be constructed under this Scheme for the year 2020-21 to each district. The details of Tribal beneficiaries for each district shall be obtained from Forest / Tribal Welfare Department and communicated to the districts.
(ii) At the District level, the District Collector shall decide the allotment of the houses to the Village Panchayats based on the above stated criteria for selection of beneficiaries.
(iii) For the selection of the list of eligible beneficiaries, a Committee shall be formed at the village level. The committee shall comprise of Block Development Officer (Block Panchayat), Zonal Deputy Block Development Officer and Village Panchayat President/Special Officer concerned shall select the beneficiary from the poor people in the Village Panchayat as per guidelines and the final list of selected beneficiaries identified by the Committee should be placed before the

Grama Sabha for its approval. The Chairman of Panchayat Union concerned shall be included as a special invitee to the Village Level Committee.

(iv) The BDO (Block Panchayat) should allocate the houses to the selected beneficiaries based on the priority category of people as approved by the Grama Sabha.

**8. Execution of works:**

(i) Administrative sanction for the scheme based on the district allocation shall be accorded by the District Collector.

(ii) The execution of the scheme shall be entrusted to the Block Development Officer (Block Panchayat).

(iii) The Block Development Officer (BP) should issue the work order to the beneficiaries after confirming the eligibility of beneficiaries with reference to ownership and availability of requisite area for construction through the officials of Rural Development and Panchayat Raj Department.

(iv) Marking of Site: The Union Overseer / Assistant Engineer / Junior Engineer concerned of the particular Village Panchayat shall mark the site as per the type design approved by the Government for commencement of work.

(v) The construction of house should be carried out by the beneficiaries themselves.

(vi) The Union Overseers, Assistant Engineers / Junior Engineers shall be responsible for the construction and other technical aspects of construction as per G.O (MS) No.111, RD & PR (PR.1), dated 21.8.2018. The Union Overseers shall assist in marking and supervision of construction works as per the design and technical standards.

(vii) The Assistant Executive Engineers shall super check the construction of the houses.

(viii) The payment of bills for the construction work done by the beneficiaries should be credited into the beneficiaries bank account directly in the following four stages :

1. Basement level
2. Lintel level
3. Roof laid stage
4. Completion stage.

(ix) The Project Director, DRDAs, Executive Engineers (RD) and Assistant Executive Engineers (RD) should frequently inspect the progress in the construction of the houses and ensure its timely completion. They should also ensure that the construction is carried out as per the approved type design and guidelines/instructions issued for the implementation of the scheme are followed.

(x) The PD, DRDA and BDOs concerned shall make arrangements for distribution of 3 to 5 fruit bearing tree saplings to each beneficiary based on the availability of space in convergence with MGNREGS. The tree saplings shall be planted immediately after laying of roof of the house. It should be ensured that tree saplings shall be of minimum 3 to 5 ft. height.

**9. Supply of Materials:**

(i) **Cement:** At the State level, necessary steps shall be taken to ensure smooth supply of cement for construction of houses. Cement supply shall be arranged through M/s. TANCEM and the payment may be made by the DRDA at District level and the proportionate cost shall be deducted from the payment due to the beneficiaries. In addition to that, as per the instructions of the Government in G.O.(Ms) No.188 Industries (MID.2) Department dated 11.12.2014 that houses constructed under various Government schemes shall also avail the benefit under the "Amma Cement Supply Scheme", Amma cement shall also be supplied to the beneficiaries as per requirement.

(ii) **Steel:** Similarly, Project Director, DRDAs should take necessary steps to procure Steel based on the needs of their district and payment may be made by the DRDAs at District level. A total quantity of 300 kg of steel shall be supplied to each beneficiary and the proportionate cost shall be deducted from the payment due to the beneficiaries.

(iii) **Doors and Windows:** Beneficiaries themselves can arrange for doors and windows. If the beneficiary is unable to arrange for doors and windows, the Project Director, DRDAs should arrange for the supply of the same to the beneficiaries concerned and the proportionate cost shall be deducted from the payment due to the beneficiaries.

For all the above procurements, the Project Director DRDAs should work out the total quantity of materials needed for their district based on the number of houses allocated to them and ensure the continuous supply of the materials to the beneficiaries for the timely completion of the houses.

**10. Special Provisions for tribal beneficiaries:**

All the conditions mentioned in the guidelines will be applicable in construction of houses to tribal beneficiaries except para 6 (i) and (iv). In addition the following provisions are made specifically.

(i) In case of tribal beneficiaries, the list of beneficiaries shall be obtained from the Forest / Tribal Welfare Department and placed before the Grama Sabha of the concerned Panchayat for approval. Subsequently, Block Development Officer (BP) shall issue work order to the beneficiaries.

(ii) All the identified beneficiaries should have house site patta. If any beneficiary is not having house site patta, the concerned District Collector should immediately take action to issue house site patta. If the beneficiary proposed by Forest Department is residing inside Reserve Forest, then the concerned District Forest Officer should ensure that the individual is given an individual title under Forest Rights Act.

(iii) For the construction of houses inside Reserve Forests, Forest Department should facilitate the movement of materials when requested by Block Development Officer/Beneficiary.

(iv) In case of tribal beneficiaries, with the permission of the District Collector, reputed NGOs/Trusts/Societies are permitted to support the beneficiary for proper execution of construction work.

**11. Documentation:**

Photographs exhibiting the beneficiary positioned in front of the house in which they reside at present shall be taken. Photographs of the houses should be taken for the 4 stages of house before making payment. These processes have to be documented / ensured by the Block Development Officer (BP) before making final payment. Further, an amount not exceeding, 1% of the allocation is earmarked for documentation and other Information, Education and Communication (IEC) activities.

**12. Monitoring:**

The District Collector shall review the progress of the construction of houses with the Block officials at regular interval. The District Collector and the Project Director, District Rural Development Agency are the Officers responsible for the proper implementation of the Scheme at the District level.

The online updation works needs to be monitored very closely. The District Collector should constitute a Monitoring committee at block and district level and follow the instructions as per DRD & PR Letter No.189/2019/RHS 2-1 dated: 03.04.2019 to monitor the process of online entries periodically with reference to field verification and Estimate & Allotment Register along with all other relevant records.

**13. Release of funds:**

(i) The Director, Rural Development and Panchayat Raj is authorized to draw the annual allocation for CMGHS in two half-yearly instalments. The fund in turn will be released to the Collector / Chairman, DRDAs of the districts at the rate of Rs.2,10,000 for SCs / Others and Rs.3 lakh for STs per house which in turn will be released to the respective BDO (Block Panchayat).

(ii) Fund will be released to the CMSPGHS Savings Bank Account which is already opened in 2016-17 at the district level for civil works maintained in the name of District Collector/Chairman, District Rural Development Agency.

(iii) At the Block level, only one account shall be maintained, which is already opened in 2016-17 for CMSPGHS towards payment for both beneficiaries and materials. After deduction for materials issued for beneficiaries, the balance amount shall be released to the beneficiaries' bank account through Electronic Clearing System (ECS) / Public Financial Management System (PFMS). Payment should not be made by cash or Cheque. This account shall be operated by BDO (BP) in appropriate manner as per rules.

14. The Additional Chief Secretary to Government, Rural Development and Panchayat Raj Department, in consultation with the Director of Rural Development and Panchayat Raj is authorized to amend these guidelines based on the exigencies that may arise from time to time.

**HANS RAJ VERMA,**
**ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT.**

//TRUE COPY//

Section Officer.

**(அரசாணை (நிலை) எண்.133 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அதி.1) துறை, நாள் 03.08.2020)**

**இணைப்பு**

**முதலமைச்சரின் பசுமை வீடு திட்டத்தினை செயல்படுத்துவதற்கான வழிகாட்டி நெறிமுறைகள்–2020–21**

1. முன்னுரை:

முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டம் 2011–12 ஆண்டில் துவக்கப்பட்டது. கிராமப்புற ஏழை மக்களின் வீட்டு வசதி தேவைகளை பூர்த்தி செய்வதோடு பசுமை எரிசக்தியை ஊக்குவிக்கும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ள இத்திட்டமானது தமிழக அரசின் சிறப்புமிக்க முயற்சியாகும். இலவச வீடு வழங்கும் இத்திட்டத்தின் கீழ் 2011–12 ஆம் ஆண்டு முதல் 2015–16 வரை ரூ.5,940 கோடி மதிப்பீட்டில் 3 இலட்சம் பசுமை வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

இத்திட்டமானது பயனாளிகள் நலன் கருதியே உள்ளதாலும் மற்றும் இதர குடியிருப்புத் திட்டங்களைக் காட்டிலும் அலகுத் தொகை கூடுதலாக உள்ளதாலும் தமிழக மக்களின் மத்தியில் மிகுந்த வரவேற்பினைப் பெற்றுள்ளதாலும் மேலும் அடுத்த 5 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டு வருடத்திற்கு 20,000 வீடுகள் கட்டப்படுகிறது. அதன்படி, 2016–17 முதல் 2018–19 வரை ரூ.1,260 கோடி செலவில் 60,000 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. மேலும், 2019–20 ம் ஆண்டில் ரூ.420 கோடி மதிப்பீட்டில் 20,000 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

இதற்கிடையில், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் வரவு–செலவு திட்ட அறிக்கை 2020–21ல் அனைத்து பழங்குடியினர் குடும்பங்களுக்கும் வீட்டு வசதியை வழங்கும் வகையில் அவர்களுக்கான 8,803 வீடுகள் உட்பட 2020–21 ம் ஆண்டில் 20,000 வீடுகள் ரூ.500 கோடி மதிப்பீட்டில் முதலமைச்சரின் பசுமை வீடு திட்டத்தின் கீழ் கட்டப்படும் என்று அறிவித்துள்ளார்கள். மேலும், சூரிய மின் சக்தி விளக்குகள் நிறுவுவதற்காக வீடு ஒன்றிற்கு ஒதுக்கீடு செய்யப்படும் தொகை ரூ.30,000 ஐ வீட்டின் கட்டுமான பணிக்கான தொகையுடன் சேர்க்கப்பட்டு, ஒரு வீட்டிற்கான ஒட்டுமொத்த கட்டுமானத் தொகை ரூ.2.10 இலட்சமாக உயர்த்தப்படும். மேலும், பழங்குடியின பயனாளிகளுக்கு அலகுத் தொகையான ரூ.2.10 இலட்சத்துடன் சேர்த்து ரூ.90,000 கூடுதலாக வழங்கப்படும். இதனால், பழங்குடியின பயனாளிகளுக்கு வீடு ஒன்றிற்கான அலகுத் தொகை ரூ.3 இலட்சமாக இருக்கும்.

இதன் அடிப்படையில், அனைத்து பழங்குடியினர் குடும்பங்களுக்கும் வீட்டு வசதியை வழங்கும் வகையில் அவர்களுக்கான 8,803 வீடுகள் உட்பட 2020–21 ம் ஆண்டில் 20,000 வீடுகள் ரூ.500 கோடி மதிப்பீட்டில் முதலமைச்சரின் பசுமை வீடு திட்டத்தின் கீழ் கட்டப்படும். மேலும், சூரிய மின் சக்தி விளக்குகள் நிறுவுவதற்காக ஒதுக்கீடு செய்யப்படும் தொகை ரூ.30,000 ஐ வீட்டின் கட்டுமான பணிக்கான தொகையுடன் சேர்க்கப்பட்டு, ஒட்டுமொத்த கட்டுமானத் தொகை வீடு ஒன்றிற்கு ரூ.2.10 இலட்சமாக உயர்த்தப்படும். மேலும், பழங்குடியின பயனாளிகளுக்கு அலகுத் தொகையான ரூ.2.10 இலட்சத்துடன் சேர்த்து, ரூ.90,000 கூடுதலாக வழங்கப்படும். இதனால், பழங்குடியின பயனாளிகளுக்கு வீடு ஒன்றிற்கான அலகுத் தொகை ரூ.3 இலட்சமாக இருக்கும்.

மேலும், ஊரகப் பகுதிகளில் சுற்றுச் சூழலை பாதுகாக்கவும், பசுமையை அதிகரிக்க ஊக்குவிப்பதற்காகவும் 20,000 பசுமை வீடுகளிலும் வீட்டுத் தோட்டம் அமைப்பதற்காக இட

வசதியை பொறுத்து ஒவ்வொரு பயனாளிக்கும் 3 முதல் 5 பழ மரக்கன்றுகள் வழங்கப்படும். இம்மரக்கன்றுகள் அனைத்தும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் ஒருங்கிணைந்து வழங்கப்படும்.

**2. இத்திட்டத்தின் சிறப்பம்சங்கள்:**

(i) ஊரகப் பகுதிகளில் வாழும் ஏழை மக்கள் முதலமைச்சரின் பசுமை வீடு திட்டத்தின் கீழ் பயன் பெற தகுதியானவர்கள்.

(ii) ஒவ்வொரு வீடும் 300 சதுர அடி பரப்பளவில், ஆதிதிராவிட மற்றும் இதர வகுப்பினருக்கு ரூ. 2.10 இலட்சம் அலகுத் தொகையிலும், பழங்குடியின வகுப்பினருக்கு ரூ.3 இலட்சம் அலகுத் தொகையிலும் மாநில அரசின் முழுமையான நிதி உதவியுடன் கட்டப்படும்.

(iii) வீடு கட்டும் பணிகளை பயனாளிகள் தாங்களாகவே மேற்கொள்ள வேண்டும்.

(iv) ஒவ்வொரு வீடும், வசிக்கும் அறை, படுக்கை அறை, சமையல் அறை, கழிப்பறை மற்றும் தாழ்வாரம் ஆகியவற்றைக் கொண்டிருக்கும். இவை தவிர மழைநீர் சேகரிப்பு அமைப்பும் கொண்டிருக்கும்.

(v) பயனாளிகளால் மேற்கொள்ளப்பட்ட கட்டுமான பணிகளுக்கான பட்டியல் தொகை கீழ்கண்டவாறு நான்கு நிலைகளில் பயனாளிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக வழங்கப்படும்.

1. அடித்தள நிலை
2. ஜன்னல் மட்ட நிலை
3. கூரை வேயப்பட்ட நிலை
4. முடிவுற்ற நிலை

(vi) பசுமை வீடுகள், பயனாளிகளின் குடியிருப்பு அமைந்துள்ள இடம் அல்லது கிராம ஊராட்சியின் பிற பகுதியில் அமைந்துள்ள பயனாளிக்கு சொந்தமான இடங்களில் கட்டப்பட வேண்டும். இத்திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டப்படுவதற்கென நில எடுப்புகள் ஏதும் செய்யப்படமாட்டாது. வீட்டுமனைப்பட்டா உள்ளவர்கள் மட்டுமே இத்திட்டத்தின் கீழ் பயன்பெற தகுதியானவர்கள் ஆவர்.

(vii) ஒவ்வொரு பயனாளிக்கும் 3 முதல் 5 பழ மரக்கன்றுகள் வழங்கப்படும். இம்மரக்கன்றுகள் பயனாளிகளால் கட்டப்படும் பசுமை வீட்டைச் சுற்றியுள்ள இடத்தில், இட வசதிக்கு ஏற்ப நடப்பட வேண்டும். பழ மரக்கன்றுகள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்து வழங்கப்பட வேண்டும்.

**3. மாதிரி வடிவமைப்பு:**

(i) இத்திட்டத்திற்கென ஏற்கனவே தனியாக உருவாக்கப்பட்ட மாதிரி வடிவமைப்பு தற்போதும் பின்பற்றப்படும்.

(ii) ஒரே மாதிரியான வடிவமைப்பில் கட்டவேண்டும் என்பதால் வடிவமைப்பில் மாறுதல்கள் அனுமதிக்கப்படுவதில்லை. இருப்பினும், அனுமதிக்கப்பட்ட வீட்டின் மொத்த பரப்பளவான 300 சதுர அடியில் வீட்டின் வடிவமைப்பில் மாறுதல் செய்யாமல் சமையலறை மற்றும் படுக்கை அறையின் திசையினை இட அமைவிற்கேற்ப மாற்றி அமைக்க அனுமதிக்கப்படும்.

(iii) இத்திட்டத்திற்கான சின்னம் செராமிக் ஓடுகளில் வடிவமைக்கப்பட்டு அனைத்து வீடுகளிலும் அனைவரும் பார்க்கும் வகையில் பதிக்கப்பட வேண்டும்.

(iv) இத்திட்டத்தில் கட்டி முடிக்கப்பட்ட அனைத்து வீடுகளிலும், திட்டத்தின் பெயர், பயனாளியின் பெயர் மற்றும் வீடு கட்டப்பட்ட ஆண்டு ஆகிய விபரங்கள் தெளிவாக தெரியும் வகையில் வண்ணத்தினால் எழுதப்படவேண்டும்.

**4. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் ஒருங்கிணைப்பு:**

(i) ஒரு வீட்டிற்கான அலகுத் தொகை ஆதிதிராவிட / இதர வகுப்பினருக்கு ரூ. 2.10 இலட்சம் மற்றும் பழங்குடியின வகுப்பினருக்கு ரூ.3 இலட்சம் தொகையுடன் கூடுதலாக மற்ற திட்டங்களுடன் ஒருங்கிணைக்கும் நோக்கத்துடன் ஒவ்வொரு பயனாளிக்கும் வீடு கட்டுவதற்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் 90 மனித நாட்களுக்கான நடைமுறையிலுள்ள அறிவிக்கை செய்யப்பட்ட ஊதியம் அளிக்கப்பட வேண்டும்.

(ii) மேலும், பயனாளிக்கு தனி நபர் இல்லக் கழிப்பறை கட்ட ரூ.12,000/– மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் ஒருங்கிணைந்து வழங்கப்பட வேண்டும்.

**5. பயனாளிகளின் தகுதிகள்:**

பயனாளிகள் கீழ்க்கண்ட தகுதிகளை பெற்றிருக்க வேண்டும்.

(i) சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சியில் வசிப்பவராக இருக்க வேண்டும்.

(ii) தொடர்புடைய கிராம ஊராட்சியில் அல்லது வேறு எங்கும் கான்கிரீட் கூரை போடப்பட்ட சொந்த வீடு எதுவும் இருக்கக் கூடாது.

(iii) அரசின் இதர வீடு கட்டும் திட்டங்களில் பயன் பெற்றவராக இருக்கக் கூடாது.

(iv) 300 சதுர அடிக்கு குறையாத வீட்டு மனை சொந்தமாக இருக்க வேண்டும்.

(v) குடும்ப தலைவரின் பெயரிலோ அல்லது குடும்ப உறுப்பினர் எவரேனும் ஒருவர் பெயரிலோ வில்லங்கமற்ற வீட்டு மனைப்பட்டா இருக்க வேண்டும்.

**6. பயனாளிகளை தெரிவு செய்யும் முறை:**

(i) ஒவ்வொரு கிராம ஊராட்சியில் வாழும் ஏழை மக்களிலிருந்து பயனாளிகளின் பட்டியல் தயார் செய்யப்பட்டு அவை கிராம சபையில் ஒப்புதல் பெறப்பட வேண்டும். அவ்வாறு பயனாளிகள் தெரிவு செய்யப்படும் போது, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார திட்டம் மற்றும் முந்தைய புது வாழ்வு திட்டத்தின் கீழ் நலிவுற்றவர்கள் என்று தெரிவு செய்யப்பட்ட பட்டியலில் (PIP) இருப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

(ii) 2020–21ம் ஆண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்தம் 20,000 வீடுகளில் 8,803 வீடுகள் பழங்குடியினர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும். மீதமுள்ள 11,197 வீடுகளில் 29 விழுக்காடு அதாவது 3,247 வீடுகள் ஆதி திராவிடர்களுக்கும் மற்றும் 71 விழுக்காடு அதாவது 7,950 வீடுகள் இதர இனத்தவர்களுக்கும் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தவிர) வழங்கப்படவேண்டும்.

(iii) மாவட்ட வாரியான ஒதுக்கீட்டில் 4 விழுக்காடு மாற்றுத்திறனாளிகளுக்கு என பிரத்யேகமாக அனைத்து பிரிவுகளிலிருந்தும் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

(iv) பயனாளிகள் பட்டியல் தயாரிக்கப்படும் போது, மாற்றுத் திறனாளிகள், விதவைகள், ஆதரவற்ற மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், பெண்களைத் தலைவராகக் கொண்ட குடும்பங்கள், முன்னாள் இராணுவத்தினர் மற்றும் ஒய்வு பெற்ற முன்னாள் துணை இராணுவ படையினர், ஊட்டச்சத்து குறைவினால் பாதிக்கப்பட்ட

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத் துறையால் (ICDS) அடையாளம் காணப்பட்ட குழந்தைகளை கொண்ட குடும்பங்கள், திருநங்கைகள், துணை இயக்குநர் (மருத்துவப் பணிகள்) அவர்களால் சான்றிதழ் வழங்கப்பட்ட ஹெச்ஐவி/எய்ட்ஸ்/காசநோய் ஆகிய நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள், தீ விபத்து, வெள்ளம் போன்ற இதர பிற இயற்கை இடர்பாடுகளால் பாதிக்கப்பட்டோர் ஆகியோருக்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டும். மேலும், மனநலம் குன்றியோர் உள்ள குடும்பங்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படவேண்டும்.

**7. வீடுகள் ஒதுக்கீடு செய்தல்:**

(i) மாநில அளவில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் இத்திட்டத்தின் கீழ் 2020–21 ஆம் ஆண்டு கட்டப்படவுள்ள வீடுகளின் எண்ணிக்கையை மாவட்ட வாரியாக ஒதுக்கீடு செய்வார். மாவட்டம் வாரியான பழங்குடியின பயனாளிகளின் விவரங்களை வனத்துறை / பழங்குடியினர் நலத்துறையிடம் பெற்று தொடர்புடைய மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

(ii) மாவட்ட ஆட்சித் தலைவர், மேலே கூறியவாறு பயனாளிகளை தெரிவு செய்யும் முறையை கடைபிடித்து அதன் அடிப்படையில் மாவட்ட அளவில் கிராம ஊராட்சிகளுக்கான வீடுகளை ஒதுக்கீடு செய்ய முடிவெடுக்க வேண்டும்.

(iii) தகுதியான பயனாளிகள் பட்டியல் தெரிவு செய்யப்படுவதற்கு கிராம அளவிலான குழு அமைக்கப்பட வேண்டும். வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி), மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் கிராம ஊராட்சித் தலைவர் / தனி அலுவலர் ஆகியோர் அடங்கிய குழு, கிராம ஊராட்சியிலுள்ள ஏழை மக்களிலிருந்து வழிகாட்டி நெறிமுறைகளின்படி பயனாளிகளை தெரிவு செய்து, அவ்வாறு குழுவால் இறுதி செய்யப்பட்ட பயனாளிகளின் பட்டியலை கிராம சபைக் கூட்டத்தில் வைத்து ஒப்புதல் பெறப்பட வேண்டும். சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் கிராம அளவிலான குழுவில் சிறப்பு அழைப்பாளராக இருப்பார்.

(iv) கிராம சபையில் ஒப்புதல் பெறப்பட்டு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு முன்னுரிமைப்பிரிவின் அடிப்படையில் வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி), வீடுகள் ஒதுக்கீடு செய்வார்.

**8. திட்ட செயலாக்கம்:**

(i) மாவட்டத்திற்கான ஒதுக்கீட்டின் அடிப்படையில் திட்டத்திற்கான நிர்வாக ஒப்புதல் மாவட்ட ஆட்சித் தலைவரால் வழங்கப்பட வேண்டும்.

(ii) திட்ட செயலாக்கம், வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) அவர்களிடம் ஒப்படைக்கப்படவேண்டும்.

(iii) வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி), தகுதியுள்ள பயனாளிகளுக்கு நிலத்தின் சொந்த உரிமை மற்றும் கட்டுமானப் பணிக்கு தேவைப்படும் இடத்தின் அளவு ஆகியவற்றை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலுவலர்களால் பார்வையிடப்பட்டு உறுதி செய்யப்பட்ட பின்னர் வேலை உத்தரவு வழங்க வேண்டும்.

(iv) இடத்தை குறியீடு செய்தல்: சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சியின் ஒன்றிய மேற்பார்வையாளர் / உதவிப் பொறியாளர் / இளநிலைப் பொறியாளர் அரசினால் ஒப்புதலளிக்கப்பட்ட வடிவமைப்புக்கேற்றவாறு வேலையைத் துவக்குவதற்காக நிலத்தில் குறியீடு செய்வார்.

(v) வீடு கட்டும் பணிகளை பயனாளிகள் தாங்களாகவே மேற்கொள்ள வேண்டும்.

(vi) ஒன்றிய மேற்பார்வையாளர்கள் / உதவிப் பொறியாளர்கள் / இளநிலைப் பொறியாளர்கள் அரசாணை (நிலை) எண்.111, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (PR.1) துறை நாள். 21.08.2018–ன்படி வீடுகளைக் கட்டுவதற்கும் மற்றும் இதர தொழில்நுட்ப வேலைகளுக்கும் பொறுப்பாவார்கள். ஒன்றிய மேற்பார்வையாளர்கள் நிலத்தை குறியீடு செய்வதற்கும், மாதிரி வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்ப குறியீடுகளின்படி வீடுகள் கட்டும் பணிகளை மேற்பார்வையிடவும் உதவியாக இருப்பார்கள்.

(vii) உதவி செயற்பொறியாளரால் (ஊ.வ) வீடு கட்டும் பணியினை உயர் அளவு (Super check) செய்ய வேண்டும்.

(viii) பயனாளிகளால் மேற்கொள்ளப்பட்ட கட்டுமான பணிகளுக்கான பட்டியல் தொகை கீழ்கண்டவாறு நான்கு நிலைகளில் பயனாளிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக வழங்கப்படவேண்டும்.

1. அடித்தள நிலை
2. ஜன்னல் மட்ட நிலை
3. கூரை வேயப்பட்ட நிலை
4. முடிவுற்ற நிலை

(ix) மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர்கள், செயற்பொறியாளர்கள்(ஊ.வ) மற்றும் உதவி செயற்பொறியாளர்கள் (ஊ.வ) வீடுகளின் பணி முன்னேற்றத்தை அடிக்கடி ஆய்வு செய்து வீடுகளை குறிப்பிட்ட காலத்திற்குள் முடிப்பதை உறுதிப்படுத்த வேண்டும். மேலும் அவர்கள் இத்திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட மாதிரி வடிவமைப்பிலும் அல்லது இத்திட்டத்திற்கான செயல்பாடு குறித்த வழிகாட்டு நெறிமுறைகள்/அறிவுரைகளின்படி செயல்படுத்தப்படுவதையும் உறுதிப்படுத்த வேண்டும்.

(x) மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர்கள் மற்றும் தொடர்புடைய வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஒவ்வொரு பயனாளிக்கும் இடவசதியை பொறுத்து 3 முதல் 5 பழ மரக்கன்றுகளை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் ஒருங்கிணைந்து வழங்கிட ஏற்பாடுகள் செய்ய வேண்டும். வீட்டின் மேற்கூரை வேயப்பட்டவுடன் இம்மரக்கன்றுகள் வீட்டைச் சுற்றியுள்ள இடத்தில் நடப்பட வேண்டும். இம்மரக்கன்றுகள் குறைந்தபட்சம் 3 முதல் 5 அடி வரை உயரம் கொண்டதாக இருப்பதை உறுதிசெய்ய வேண்டும்.

**9. கட்டுமானப் பொருட்கள் விநியோகம்:**

(i) **சிமெண்ட்:** மாநில அளவில், பயனாளிகள் வீடுகள் கட்டுவதற்கு தேவையான சிமெண்ட் தங்குதடையின்றி விநியோகம் செய்ய தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். சிமெண்ட் வழங்குதலை டான்சம் (M/s.TANCEM) மூலமாக ஏற்பாடு செய்து இத்தொகை மாவட்ட அளவில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையால் வழங்கப்பட்டு, அதற்கான தொகையை பயனாளிக்கு வழங்கப்பட வேண்டிய தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்பட வேண்டும். மேலும், அரசாணை (நிலை) எண். 188 தொழில் (MID.2) துறை, நாள் 11.12.2014–ன்படி பல்வேறு அரசு திட்டங்களின் கீழ் கட்டப்படும் வீடுகளுக்கு பயன்பெறும் வகையில் “அம்மா சிமெண்ட் வழங்கும் திட்டத்தின் கீழ்”, தேவையின் அடிப்படையில் பயனாளிகளுக்கு அம்மா சிமெண்ட் விநியோகம் செய்யப்பட வேண்டும்.

(ii) **இரும்புக் கம்பி:** இதேபோன்று, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் திட்ட இயக்குநர்கள் அவர்களது மாவட்டங்களின் தேவைக்கேற்ப இரும்புக் கம்பிகளை

கொள்முதல் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். அதற்கான தொகையை மாவட்ட அளவில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையால் வழங்கப்பட வேண்டும். இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 300 கிலோ கிராம் இரும்பு கம்பி ஒவ்வொரு பயனாளிக்கும் வழங்கப்பட்டு, அதற்கான தொகையை பயனாளிக்கு வழங்கப்பட வேண்டிய தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்பட வேண்டும்.

(iii) **கதவுகள் மற்றும் ஜன்னல்கள்:** கதவுகள் மற்றும் ஜன்னல்களை, பயனாளிகள் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ளலாம். பயனாளியால் கதவுகள் மற்றும் ஜன்னல்களை ஏற்பாடு செய்ய இயலாத நிலையில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திட்ட இயக்குநர் கதவுகள் மற்றும் ஜன்னல்களை ஏற்பாடு செய்து சம்மந்தப்பட்ட பயனாளிக்கு வழங்கிவிட்டு, அதற்கான தொகையை பயனாளிக்கு வழங்கப்பட வேண்டிய தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்பட வேண்டும்.

ஒதுக்கீடு செய்யப்பட்ட வீடுகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மேற்காணும் கொள்முதல்களுக்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர்கள் தங்கள் மாவட்டங்களுக்குத் தேவையான மொத்த அளவினை கணக்கிட்டு, அதன்படி குறித்த நேரத்திற்குள் வீடுகள் கட்டி முடிப்பதற்கு தடங்கலின்றி கட்டுமானப் பொருட்கள் விநியோகம் செய்யப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

**10. பழங்குடியின பயனாளிகளுக்கான சிறப்பு அம்சங்கள்:**

பழங்குடியின பயனாளிகள் வீடு கட்டுவதற்கு, இத்திட்ட வழிகாட்டி நெறிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள பத்தி **6 (i)** மற்றும் **(iv)** நீங்கலாக அனைத்து நிபந்தனைகளும் பொருந்தும். மேலும், கீழ்க்கண்ட வழிகாட்டி நெறிமுறைகளும் சிறப்பினமாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

(i) வனத்துறை மற்றும் பழங்குடியினர் நலத்துறையிடமிருந்து, பழங்குடியின பயனாளிகள் பட்டியலை பெற்று அதனை தொடர்புடைய கிராம ஊராட்சியின் கிராம சபையில் வைத்து அங்கீகரிக்கப்பட்ட பின்னர், பயனாளிகளுக்கு வட்டார வளர்ச்சி அலுவலரால் (வ.ஊ) வேலை உத்திரவு வழங்கப்பட வேண்டும்.

(ii) தேர்வு செய்யப்பட்ட அனைத்து பயனாளிகளும் வீட்டுமனைப் பட்டா வைத்திருக்க வேண்டும். தேர்வு செய்யப்பட்டுள்ள பயனாளிகளில் எவருக்கேனும் வீட்டுமனைப் பட்டா இல்லாமல் இருப்பின், தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவர் அப்பயனாளிக்கு வீட்டுமனைப் பட்டா உடனடியாக வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். வனத் துறை மூலம் பரிந்துரை செய்யப்பட்ட பயனாளிகள் பாதுகாக்கப்பட்ட காடுகளின் உட்பகுதிகளில் வசிப்பவராக இருப்பின் தொடர்புடைய மாவட்ட வன அலுவலர், வன உரிமைச் சட்டத்தின் கீழ் அப்பயனாளி தனிநபர் நில உரிமை வைத்திருப்பதை உறுதி செய்திடல் வேண்டும்.

(iii) பாதுகாக்கப்பட்ட காடுகளின் உட்பகுதிகளில் வீடுகள் கட்டுவதற்கு, வட்டார வளர்ச்சி அலுவலர் / பயனாளி கோரிக்கையின் அடிப்படையில் தேவையான கட்டுமான பொருள்களை எடுத்துச் செல்ல வனத்துறை உரிய உதவி மற்றும் வழிவகை செய்திட வேண்டும்.

(iv) பழங்குடியின பயனாளிகள் வீடு கட்டும் பணிகளை மேற்கொள்ள உதவி செய்வதற்காக, மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதியுடன் பெயர்பெற்ற அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் / அறக்கட்டளைகள் / சங்கங்கள் அனுமதிக்கப்படலாம்.

**11. ஆவணப்படுத்துதல்:**

பயனாளி தற்போது தான் வசிக்கும் வீட்டின் முன்பாக நின்று புகைப்படம் எடுக்கப்பட வேண்டும். வீட்டின் நான்கு நிலைகளிலும் தொகை வழங்குவதற்கு முன்பாக புகைப்படம் எடுக்கப்பட வேண்டும். இறுதி தவணைத் தொகை வழங்கும் முன்பாக வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) இந்தப் பதிவினை ஆவணப்படுத்துவதை உறுதிசெய்ய வேண்டும். மேலும் இத்திட்டத்தின் மொத்த நிதி ஒதுக்கீட்டில் 1 விழுக்காட்டிற்கு மிகாமல் ஆவணப்படுத்துதல் மற்றும் தகவல், கல்வி மற்றும் தொடர்பு (Information Education and Communication) நடவடிக்கைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படலாம்.

**12. கண்காணித்தல்:**

மாவட்ட ஆட்சித் தலைவர் இத்திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகளின் பணி முன்னேற்றத்தினை குறித்த கால இடைவெளியில் வட்டார அளவிலான அலுவலர்களை ஆய்வு செய்ய வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் ஆகியோர் மாவட்ட அளவில் இத்திட்டத்தை முறையாக செயல்படுத்துவதற்கு பொறுப்பாவர்.

இணையதளத்தில் பணி முன்னேற்றம் குறித்த பதிவுகள் மேற்கொள்வதை மிகத் துல்லியமாக கண்காணித்திட வேண்டும். இணையதள பதிவுகள் செய்யப்படுவதை அவ்வப்போது கள ஆய்விலும், மதிப்பீடு & ஒதுக்கீடு பதிவேடு மற்றும் தொடர்புடைய இதர ஆவணங்களுடனும் சரிபார்ப்பதை கண்காணித்திட, மாவட்ட ஆட்சித் தலைவரால் வட்டார மற்றும் மாவட்ட அளவிலான கண்காணிப்பு குழுக்களை இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கடித எண்.189/2019/RHS 2-1 நாள்: 03.04.2019 ன்படி அமைக்கப்பட்டு, அதில் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளைப் பின்பற்றிட வேண்டும்.

**13. நிதி விடுவிப்பு:**

(i) முதலமைச்சரின் பசுமை வீடு திட்டத்திற்கான ஆண்டு நிதி ஒதுக்கீட்டிலிருந்து இரண்டு அரையாண்டு தவணைகளில் நிதி பெறுவதற்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. ஒரு வீட்டிற்கு ஆதிதிராவிட / இதர வகுப்பினருக்கு ரூ. 2.10 இலட்சம் வீதமும், பழங்குடியின வகுப்பினருக்கு ரூ.3 இலட்சம் வீதமும் மாவட்ட ஆட்சித் தலைவர் / பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களுக்கு நிதி விடுவிக்கப்படும். அதனை சம்மந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ)க்கு மாவட்ட ஆட்சித் தலைவர் / பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்கள் விடுவிப்பார்.

(ii) இதற்கான நிதி முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டத்திற்கென மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர் / பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை என்ற பெயரில் கட்டுமான பணிகளுக்காக ஏற்கெனவே 2016-17 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டுள்ள வங்கி சேமிப்பு கணக்கிற்கு விடுவிக்கப்படும்.

(iii) வட்டார அளவில், முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டத்திற்கென பயனாளிகளுக்கு தொகை வழங்குவதற்கும் மற்றும் கட்டுமானப் பொருட்களுக்கான தொகை வழங்குவதற்கும் ஏற்கெனவே 2016-17 ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட ஒரே வங்கிக் கணக்கினையே பராமரிக்கப்பட வேண்டும். பொருட்களுக்கான தொகை பிடித்தம் செய்யப்பட்டது போக மீதமுள்ள தொகையினை பயனாளிகளுக்கு மின்னணு பரிவர்த்தனை (ECS) / பொது நிதி மேலாண்மை முறை

(PFMS) மூலமாக விடுவிக்கப்பட வேண்டும். ரொக்கமாகவோ அல்லது காசோலையாகவோ வழங்கப்படக் கூடாது. மேற்படி கணக்கு வட்டார வளர்ச்சி அலுவலரால் (வ.ஊ) நடைமுறையிலுள்ள விதிகளின்படி தகுந்த முறையில் பராமரிக்கப்பட வேண்டும்.

**14.** தேவையின் அடிப்படையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருடன் கலந்தாலோசனை செய்து, மேற்கண்ட வழிகாட்டு நெறிமுறைகளுக்கு தேவையான திருத்தங்களை மேற்கொள்வதற்கு அரசு கூடுதல் தலைமை செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

**ஹன்ஸ் ராஜ் வர்மா,**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

**// உண்மை நகல் //**

**பிரிவு அலுவலர்.**